# 21 ஞாயிறு தினத்தைப் பரிசுத்தமாக அனுசரித்தல்

ஆறு நாள்கள் வேலை செய்யலாம். ஏழாம் நாளோ ஓய்வு நாளாகிய ‘‘சாபாத்து’’. ‘‘ஆண்டவருக்குப் புனிதமான நாள்...’’
(விப. 31:15)

இறைவன் ஆறு நாட்களாக உலகைப் படைத்து ஏழாம் நாள் ஓய்வெடுத்தார். ஆறு நாள் வேலை செய்யும் மனிதனுக்கு ஏழாம் நாள் ஓய்வு நாளாகும். இவ் உலகைப் படைத்து மீட்பைப் பெற்றுத்தந்த இறைதந்தைக்காக அன்றைய தினத்தை செலவழிப்பது எமது கடமையாகும். இறைவனுக்கு ஏற்புடைய நாளாக அன்றைய தினத்தைச் செலவழிப்பதோடு மட்டுமல்லாமல் நற்செயல்களிலும் ஈடுபடவேண்டும்.

எனவே இறைவனின் நாளாகிய ஞாயிறு தினத்தைப் பரிசுத்தமாக அனுசரிக்கும் முகமாக எமது கலாசார பண்பாடுகளுக்கு அமைவாக அதனை நடைமுறைப்படுத்த வேண்டும். இறைவனின் நாளாகிய ஞாயிறு தினத்தின் திருப்பலி, திருவழிபாட்டின் ஊற்றும் உச்சியுமாகும்.

யூத பாரம்பரியத்தின்படி ஓய்வுநாளில் மக்கள் செபக்கூடங்களில் ஒன்றுகூடி இறைவார்த்தையைப் பகிர்ந்து கொண்டனர். இயேசுவும் திருத்தூதர்களும் இந்தப் பாரம்பரியத்தை மதித்து செயற்பட்டனர் என புதிய ஏற்பாட்டில் வாசிக்கின்றோம். (மாற். 6:1 -6)

அத்தினத்தில் கிறிஸ்து உயிர்த்த தினமாகிய ஞாயிறு தினம் தற்போது கிறிஸ்துவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட தினமாகும்.

எமது அன்பு நிறைந்த இறைதந்தை தமது வார்த்தையாலும் தம் மகனுடைய திருவுடலாலும் ஊட்டமளித்து வலுப்படுத்துவதற்காக நாம் வரும்வரை காத்திருக்கிறார்.

**ஞாயிறு தினம்**

✝ இயேசு உயிர்த்த நாளாக இருத்தல். (லூக். 24: 1 - 12)

✝ உயிர்த்த இயேசு கூடுதலாக காட்சியளித்த நாளாக இருத்தல்.

- மகதலா மரியாவுக்குக் காட்சி கொடுத்தல். (யோவா. 20: 11 - 18)
- திருத்தூதருக்குக் காட்சி கொடுத்தல். (யோவா. 20: 19 - 23)
- தோமாவுக்குக் காட்சி கொடுத்தல். (யோவா. 20: 24 - 29)

✝ தூய ஆவியின் வருகையாகிய பெந்தக்கோஸ்து திருநாளாக இருத்தல். ( திப. அதி. 2)

பத்துக் கட்டளைகளில் மூன்றாவது கட்டளையாகிய ஓய்வு நாள் பற்றிப் பின்வருமாறு கூறப்படுகிறது.

> ஓய்வு நாளைத் தூயதாகக் கடைப்பிடிப்பதில் கருத்தாயிரு. ஆறு நாள்கள் நீ உழைத்து உன் அனைத்து வேலையையும் செய்வாய். ஏழாம் நாளோ உன் கடவுளாகிய ஆண்டவருக்கான ஓய்வு நாள்...
>
> (விப. 20: 8 - 10)

எனவே கத்தோலிக்கராகிய நாம் எமது ஞாயிறு தின இறைவழிபாட்டுக் கடமைகளை ஆண்டவர் முன்னிலையில் நிறைவேற்ற வேண்டும். அதற்கேற்ப ஞாயிறு தினமன்று திருப்பலியில் முழுமையாக பங்கேற்க வேண்டும். அல்லது அதற்கு முன் தினம் நிறைவேற்றப்படும் ஞாயிறு தினத் திருப்பலியில் பங்குபற்றுவதன் மூலம் அக் கடமையை நிறைவேற்றலாம். முழுத் திருப்பலியில் பங்குகொள்ளுதல் என்பது திருப்பலிக்கான வருகைப்பாடல் தொடக்கம் முடிவுப்பாடல் வரை நடைபெறும் முழுவழிபாட்டிலும் பங்குகொள்ளுவதாகும்.

ஞாயிறு தினத் திருப்பலியில் நாம் கட்டாயம் பங்குகொள்ளுதல் வேண்டும். சில வேளைகளில் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையிலிருத்தல், நோயாளியைப் பராமரித்தல் போன்ற சந்தர்ப்பங்களில் திருப்பலியில் பங்குகொள்ள முடியாவிட்டால் அது பாவமல்ல. ஆனால் ஞாயிறு தினத் திருப்பலியை வேண்டுமென்றே தவிர்த்துக் கொள்ளும்போது கத்தோலிக்கராகிய நாம் கனமான பாவத்தைக் கட்டிக் கௌ்கிறோம். பாடசாலை விடுமுறை காலங்களில் மறைவகுப்பு நடைபெறா திருப்பினும் ஞாயிறு திருப்பலியில் பங்குபற்றுவது கட்டாயமாகும். சுற்றுலாக்களில் ஈடுபட்டிருக்கும் போது கூட ஒரு ஆலயத்தில் ஞாயிறு திருப்பலியில் பங்குபற்ற மறந்துவிடக்கூடாது.

உயிர்ப்பின் வெற்றி விழாவாகிய ஞாயிறு திருப்பலியில் கத்தோலிக்கராகிய நாம் பங்குபற்றுவதன் மூலம் கிறிஸ்துவுடனும் திருச்சபையுடனும் ஒன்றித்து விசுவாச உறவில் வளர்ச்சியடைகின்றோம். இறைவனின் புனிதத்தன்மைக்கும் மீட்பின் நம்பிக்கைக்கும் சான்று பகர்ந்து தூய ஆவியின் வழிநடத்துதலில் இறைமக்களாகிய நாம் உறுதிபெறுகின்றோம்.

### ஞாயிறு தினத்தைப் பரிசுத்தமாக அனுசரிக்க மேற்கொள்ளக் கூடிய செயற்பாடுகள்

- ✝ ஞாயிறு தினத்தில் அர்த்தமுள்ள வகையில் திருப்பலியில் முழுமையாகப் பங்குபற்றி நற்கருணை பெறல்.
- ✝ அன்றைய நாள் இறைவார்த்தையை வாசித்துத் தியானித்தல்.
- ✝ மறைக்கல்வி வகுப்பிற்குச் செல்லுதல்.
- ✝ இரக்கச் செயல்களில் ஈடுபடுதல்.
- ✝ நோயாளர்களைத் தரிசித்தல்.
- ✝ பங்கில் அல்லது கிராமத்தில் நடைபெறும் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டு பொதுநன்மைக்காகச் செயற்படுதல்.
- ✝ பங்கின் பக்திச் சபைகளில் இணைந்து செயற்படுதல்.

✝ தமது குடும்பத்தினதும் உறவினர்களினர்களினதும் தேவைகளில் உதவுதல்.

இவ்வாறாக ஞாயிறு திருப்பலிக் கொண்டாட்ட நாளைப் பரிசுத்தமாக அனுசரித்து இறைவனில் மகிழ்ச்சியை அனுபவித்துக் கொள்வது கத்தோலிக்கராகிய எமது தலையாய கடமையாகும்.

**செயற்பாடு**

1. விப. 31:15 இன்படி ஓய்வுநாள் யாருக்காகக் கடைப்பிடிக்க வேண்டிய நாளாகும்?
2. பத்துக் கட்டளைகளில் மூன்றாவது கட்டளையை எழுதிக் காட்டுங்கள்.
3. கத்தோலிக்கராகிய எமது ஞாயிறுதினக் கடன்திருநாளின் பிரதான கடமை என்ன?
4. ஞாயிறு தினத்தைப் பரிசுத்தமாக அனுசரிக்க உம்மால் மேற்கொள்ளக் கூடிய செயற்பாடுகள் ஐந்து எழுதுக.

**வாழ்க்கைக்கு**

ஞாயிறு திருப்பலியில் பங்குபற்றி அன்றைய நாளை புனிதமாக்குவோம்.